தினமணி

உழவும் பசுவும் ஒழிந்த கதை!

அர்ஜுன் சம்பத்

First Published : 07 Jul 2012 12:58:05 AM IST

ஆங்கிலேயர்கள் இந்தியாவை ஆக்கிரமித்த பின் இங்குள்ளவை பற்றி அவர்கள் ஆச்சரியப்பட்ட விஷயங்கள் இரண்டு. ஒன்று குருகுலக்கல்வி, மற்றொன்று நமது பாரம்பரிய விவசாயம்.

அப்போதைய பிரிட்டிஷ் இந்திய கவர்னரான ராபர்ட் கிளைவ் நம் விவசாய முறையைப் பற்றி நீண்ட விரிவான ஆய்வு செய்தார். இந்திய விவசாய முறை பிரிட்டிஷாரைச் சார்ந்திருக்கவும் அவர்களுக்குச் சாதகமாகவும் மாற்ற நினைத்தார்.

அவருடைய ஆய்வின்படி, இந்தியக் கால்நடைகள், குறிப்பாக, பசுக்கள்தான் நமது விவசாயத்தின் முதுகெலும்பு. பசுக்கள் இல்லை என்றால் இந்திய விவசாயம் அழியும்.

இப்பசுக்களை அழித்துவிட்டால் விவசாயம் அழிவுப்பாதையை நோக்கித் திரும்பும். அதன் மூலம் ரசாயன உரங்களுக்காகவும், பூச்சிக்கொல்லி மருந்துகளுக்காகவும், ஆங்கிலேயர்களைச் சார்ந்திருக்கும் நிலை ஏற்படும் என உணர்ந்தார்.

நமது பசுக்களின் சாணம் நல்ல சத்தான உரமாகவும், அவற்றின் சிறுநீர் சிறந்த பூச்சிக்கொல்லியாகவும் காலம்காலமாக நம்மால் பயன்படுத்தப்பட்டு வந்தது. பசுக்கள் அழிந்தால் இந்தியர்கள், உரத்துக்கும், பூச்சிக்கொல்லி மருந்துக்கும் ஆங்கிலேயரைச் சார்ந்து நிற்கும் நிலை உருவாகும் என முடிவு செய்தார். இப்படித்தான் ஆங்கிலேய நாட்டின் உரங்கள் இங்கு நுழைந்தன.

நமது பசுக்களின் சாணத்தையும், சிறுநீரையும் பயன்படுத்தி ஒரு ஏக்கருக்கு 54 குவிண்டால் அளவுக்குச் சத்தான அரிசியை நாம் உற்பத்தி செய்தோம். இதை அறிந்து, 1760-இல் ராபர்ட் கிளைவ், பசுக்களை கொல்லப் பசுவதைக் கூடங்களை (ஸ்லாட்டர் ஹவுஸ்) இந்தியாவில் நிறுவினார். நாளொன்றுக்கு 30 ஆயிரம் பசுக்கள் வீதம் ஒரு ஆண்டில் ஒரு கோடிப் பசுக்களைக் கொன்றார்.

அவர் இந்தியாவை விட்டுச் செல்வதற்கு முன் இதேபோல பல கூடங்களை நிறுவினார். இதன் மூலம் லட்சக்கணக்கான பசுக்கள் உணவுக்காகக் கொல்லப்பட்டன. அக்காலத்தில் பெரும்பாலான பகுதிகளில் நம் மக்கள்தொகையைவிட, பசுக்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தது.

இதன் மூலம் உணவுதானிய உற்பத்தி தடையின்றி நடந்தது. 1910-ஆம் ஆண்டு நம் நாட்டில் 350 பசுவதைக்கூடங்கள் இரவும், பகலும் இயங்கின. பசுக்களின் எண்ணிக்கை படிப்படியாகக்

குறைந்ததும் நாம் ரசாயன உரத்துக்கு அவர்கள் வாசலை நாடிய நிலை உருவானது. இதன் மூலம் யூரியாவும், பாஸ்பேட் உரங்களும் உள்ளே நுழைந்தன.

நம் நாடு சுதந்திரம் அடைந்தபின் பசுமைப்புரட்சி என்ற பெயரில் பெருமளவு ரசாயன உரங்களைப் பயன்படுத்தி உற்பத்தியைப் பெருக்கினோம். அதன் பக்கவிளைவுகளை இன்று அனுபவிக்கிறோம்.

ஒருமுறை நிருபர் ஒருவர் இந்த பசுவதைக் கூடங்கள் பற்றி மகாத்மா காந்திஜியிடம் கேட்டபோது, "இந்தியா சுதந்திரம் அடையும் நாளில் அனைத்து பசுவதைக் கூடங்களும் மூடப்படும்' என்றார்.

1929-ஆம் ஆண்டு நேரு ஒரு பொதுக்கூட்டத்தில் பேசுகையில், "நான் இந்தியாவின் பிரதமரானால் இங்குள்ள பசுவதைக் கூடங்களை மூடுவதே என்னுடைய முதல் வேலையாக இருக்கும்' என்றார்.

இதில் மிகப்பெரிய சோகம் என்னவென்றால் 1947-க்கு பின் 350 பசுவதைக்கூடங்கள் என்ற நிலையில் இருந்து, 36 ஆயிரம் பசுவதைக்கூடங்கள் என்ற நிலைக்கு இப்போது முன்னேறிவிட்டோம். இன்று அதிநவீன இயந்திரங்களால் ஆன வதைக்கூடங்கள் நிறுவப்பட்டு, ஒரு மணி நேரத்தில் பத்தாயிரம் பசுக்கள் என்ற அளவில் வதை செய்யும் திறனுடன் இரவும், பகலும் இயங்கிக் கொண்டிருக்கின்றன.

சாப்பாட்டுக் கறிக்காகவும், தோலுக்காகவும் லட்சக்கணக்கான பசுக்கள் கொடூரமாகக் கொல்லப்படுகின்றன. தில்லியில் மட்டும் 11 ஆயிரம் பசுவதைக் கூடங்கள் சட்டத்துக்குப் புறம்பாக இயங்குகின்றன, இங்கு மட்டும் நாளொன்றுக்கு இரண்டு லட்சம் பசுக்கள் கொல்லப்படுகின்றன.

நமது நாட்டுப் பசுக்களின் இனமே கருவறுக்கப்படும் சூழல் நடந்து கொண்டிருக்கிறது. நமது பாரம்பரிய கால்நடைகள் நல்ல உடல் சக்தியுடன் நோய் எதிர்ப்புத் திறன், வெயிலைத் தாங்கும் சக்தி பெற்றவை. மாபியா கும்பல், அவர்களுடைய லாரி, டிரக்குகளில் நூற்றுக்கணக்கான பசுக்களைச் சந்தைகளில் வாங்கி, வதைக்கூடங்களுக்கு அனுப்பி வருகிறது.

இதற்கு போலீஸ் துறையும் உடந்தையாகச் செயல்படுகிறது. வடமாநிலங்களில் துப்பாக்கி முனையில் கால்நடைகள் கிராம மக்களிடமிருந்து பறித்துச் செல்லப்படுகின்றன.

விவசாயம் அழிந்து தொழிற்சாலைகளும், நகரமயமாதலும் பெருகி வருகிறது. பெரும்பாலான விவசாய நிலங்கள் பிளாட்டுகளாகவும், வர்த்தகக் கேந்திரங்களாகவும் உருமாறிவிட்டன.

கால்நடைகளுக்கு பசுந்தீவனம், வைக்கோல் குறைந்துகொண்டே வருகிறது. மேய்ச்சல் நிலமும் மறைந்து கொண்டே வருகிறது. முந்தைய ஆட்சியில் நிலமற்ற விவசாயிகளுக்கு இரண்டு ஏக்கர் நிலம் திட்டத்தில் இருந்த புறம்போக்கு நிலங்களும் மறைந்துவிட்டன. விளைநிலம் குறைந்தால் என்ன? குறைந்த நிலம், அதிக மகசூல் என்ற நோக்கில் அறிவியலார்கள் உள்ளனர். உணவுப்பொருள்களை விளைவிப்பதைவிட, இறக்குமதி செய்து கொள்வது எளிது என அரசியல்வாதிகள் கூறுகின்றனர்.

இதன் பாதிப்புகளை அனுபவிக்கப்போவது வருங்கால சந்ததிகள்தான். அறிவியலார்கள் மற்றும் பிராணிகள் நல அமைப்பினர்களின் புள்ளிவிவரப்படி நம் நாட்டில் உள்ள 72 மில்லியன் (ஒரு மில்லியன் என்றால் பத்து லட்சம்) உழவு மற்றும் வண்டி மாடுகள், 27 மில்லியன் மெகாவாட் சக்தி அளவுக்கு உடல் உழைப்பை நமக்குக் கொடையாக அளிக்கின்றன.

இந்த உழைப்பின் மூலம், அதே அளவு சக்தியை உற்பத்தி செய்ய நிலக்கரி மற்றும் மற்ற மூலப்பொருள்களைச் சேமிக்கின்றன.

இக்கால்நடைகளால் ஓராண்டுக்கு 100 மில்லியன் டன் காய்ந்த சாணம் நமக்குக் கிடைக்கிறது. இதன் மதிப்பு 20 ஆயிரம் கோடி ரூபாய்.

இச்சாணம் கிடைப்பதால் 50 மில்லியன் டன் விறகு சேமிக்கப்படுகிறது. இதனால் மரங்கள் அதிக அளவுக்கு வெட்டப்படாமல் தவிர்க்கப்படுவதுடன், இயற்கைச் சூழலும் பாதுகாக்கப்படுகிறது.

இந்த 73 மில்லியன் கால்நடைகளும் கறிக்காகவோ, தோலுக்காகவோ கொல்லப்பட்டால் நமக்கு 7.3 மில்லியன் டிராக்டர்கள் தேவைப்படும். இதற்கு 2 லட்சம் கோடி ரூபாய் முதலீடு தேவைப்படும்.

அவற்றை இயக்குவதற்கு 2 கோடியே 37 லட்சத்து 50 ஆயிரம் டன் டீசல் தேவைப்படும். இதன் மதிப்பு ஒரு லட்சம் கோடி ரூபாய். இந்த அளவு டீசலைப் பயன்படுத்துவதால் காற்று மாசுபாடு மற்றும் புவி வெப்பமயமாதல் அதிகரிக்கும்.

இயற்கை நமக்குத் தந்த செல்வங்களான, கால்நடைகளைக் கொல்வதன் மூலம் நாம் எவ்வளவு விலையை தந்து கொண்டிருக்கிறோம் என்பதை சிந்திக்கும் ஆற்றல் பெற்றோர் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இன்று ரசாயன உர இறக்குமதிக்காக கோடிக்கணக்கான ரூபாயை பன்னாட்டு கம்பெனிகளுக்கு கொட்டிக் கொடுக்கிறோம். அது மட்டுமன்றி பால் மற்றும் பசு சார்ந்த பொருள்களையும் இறக்குமதி செய்கிறோம்.

ஒரு நவீன மாடு வதைக் கூடத்திற்கு அதைச் சுத்தம் செய்ய தண்ணீர் அளவு ஒரு நாளைக்கு இரண்டு லட்சம் லிட்டர். இது பல லட்சம் மக்களின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்யும் தண்ணீர் தட்டுப்பாடும் எரிசக்தி தட்டுப்பாடும் உள்ள நம் நாட்டில் இயற்கையின் கொடையாகக் கிடைத்த இந்த கால்நடைச் செல்வங்களைக் கொல்வதை இனிமேலும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டுமா?

---

தினமலர்
உண்மையின் உரைகல்

## கண்மாயில் காட்டாமணக்கு செடிகளால் விவசாயம் பாதிப்பு

பதிவு செய்த நாள் : ஜூலை 07,2012,23:31 IST

கருத்தை பதிவு செய்ய

கீழக்கரை:கீழக்கரை அருகே கொம்பூதி கண்மாயில் காட்டாமணக்கு செடிகள் அதிகம் வளர்ந்துள்ளதால் நீர் தேக்கமுடியாமல் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது.திருப்புல்லாணி ஒன்றியம் கொம்பூதி கண்மாய் நீண்ட காலமாக தூர் வாரப்படவில்லை. கண்மாயில் உள்ள எட்டு மடைகளில் மூன்று சேதமடைந்துள்ளன. கரை பலப்படுத்தாமல் மழை நீர் வீணாக கடலுக்கு செல்கிறது. கண்மாய்க்குள் காட்டாமணக்கு செடிகள் படர்ந்துள்ளதால் தண்ணீர் தேக்க முடியாமல் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது.ஊராட்சி தலைவர் ஏ.கிருஷ்ணன் கூறியதாவது: செடியை அகற்றும் போது கைகளில் அரிப்பு ஏற்படுவதால் மக்கள் யாரும் முன் வரவில்லை. மண் அள்ளும் இயந்திரத்தின் உதவியுடன், செடிகளை வேருடன் அகற்றினால் தான் நிரந்தர தீர்வு பிறக்கும். ஊராட்சியில் நிதி இல்லாததால் அகற்ற முடியாத நிலையில் உள்ளோம். கலெக்டர் சிறப்பு நிதி ஒதுக்கி செடிகளை அகற்ற உத்தரவிட வேண்டும், என்றார்.

---

தினகரன்

## அவரையில் அதிக மகசூல் பெற தோட்டக்கலை மாணவிகள் பயிற்சி

பதிவு செய்த நேரம்:2012-07-07 12:08:06

உத்தமபாளையம், : உத்தமபாளையம் அருகே உ.அம்மாபட்டி, உ.அம்பாசமுத்திரம் உள்ளிட்ட கிராம பகுதிகளில் அவரைக்காய் அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது.

அவரையில் அதிக மகசூல் பெறும் வழிமுறை, தொழில்நுட்ப விளக்கம் குறித்து அறிய பெரியகுளம்

தோட்டக்கலைத்துறை கல்லுரீரி மாணவிகள் இப்பகுதிகளுக்கு நேரில் வந்தனர்.
விவசாயி சின்னாண்டி என்பவரின் தோட்டத்தில் மாணவிகள் பர்வதகுமாரி, பூரணதிவ்யா, பிரேமா, பிரியா, பிரியங்கா, சஜினாபானு, சரஸ்வதி, சரவணபிரியா, சிந்து, சௌமியா ஆகியோர் பயிற்சி பெற்றனர்.
அப்போது, அதிக மகசூல் பெறுவது, பூச்சித்தாக்குதலில் இருந்து செடிகளை மீட்பது, பாசன நீரை சிக்கனமாக பயன்படுத்துவது குறித்து மாணவிகளுக்கு விவசாயிகள் விளக்கி கூறினர்.

## மாம்பழ சீசன் முடிந்தது ருசியான பழங்கள் கிடைக்காமல் வாடிக்கையாளர்கள் ஏமாற்றம்

பதிவு செய்த நேரம்:2012-07-07 10:02:13

தர்மபுரி, : மாம்பழத்திற்கு புகழ் பெற்ற தர்மபுரியில் மாம்பழ சீசன் முடியும் தருவாயில், ருசியான மாம்பழங்கள் கிடைக்காமல் வாடிக்கையாளர்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.
தமிழகத்தில் தர்மபுரி, கிருஷ்ணகிரி, சேலம் ஆகிய மாவட்டங்களில் மா சாகுபடி அதிகளவில் நடக்கிறது. பருவமழை தாமதத்தால் மாம்பழ உற்பத்தி இந்த ஆண்டு குறைந்தது. குறிப்பாக ருசியான மாம்பழ விளைச்சல் மிகவும் குறைவாகவே இருந்தது. தர்மபுரி மாவட்டத்தில் காரிமங்கலம், பாலக்கோடு, அரூர் உள்ளிட்ட பகுதிகளில் மல்கோவா, அல்போன்சா, நீலம், ரோஸ்குண்டு, பெங்களூரா, சீரி உள்ளிட்ட மாம்பழ வகைகள் விற்பனைக்கு வந்தது. கடந்த 3 மாதங்களாக விற்பனை செய்யப்பட்டாலும், தற்போது சீசன் முடியும் தருவாயில் உள்ளது. மாம்பழ மண்டியில் இருந்து சிறு வியாபாரிகள் பழங்களை பெற்று கடைகளில் விற்று வந்தனர். இதனால் பலருக்கு வேலைவாய்ப்பு கிடைத்தது.
ருசியான மாம்பழங்களான மல்கோவா, அல்போன்சா, நீலம் ஆகியவையின் வரத்து குறைந்து விட்டதால் மற்ற மாம்பழங்கள் மட்டுமே விற்பனையில் உள்ளன. அதுவும் சிறிய அளவிலான, எடை குறைந்த பழங்களே விற்பனைக்கு வருகிறது. அவை ரூ. 10 முதல் ரூ. 30 வரை விற்கப்படுகிறது. இதுகுறித்து வியாபாரிகள் கூறுகையில், மாம்பழ சீசன் கிட்டதட்ட முடியும் தருவாயில் உள்ளது. அதுவும் ருசியான மாம்பழங்களின் சீசன் கடந்த வாரம் முடிந்துவிட்டது. அப்படியே ருசியான பழங்கள் கிடைத்தாலும் எடை குறைந்த, உரிய சாகுபடி நேரத்தில் பயிரிடாத பழங்களாகவே இருக்கும். இதுபோன்ற பழங்கள் கொஞ்சம் ருசி குறைவாகவே இருக்கும். சீசன் முடிந்துவிட்டதால் மற்ற வகை உள்ளூர் மாம்பழங்களே மண்டியில் இருந்து சிறு வியாபாரிகளுக்கு விற்பனை செய்யப்படுகிறது.
இந்த ஆண்டு மாம்பழ சாகுபடியே குறைவாகவே இருந்தது. இதனால் விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் பெரிதும் பாதிப்படைந்துள்ளோம். வாடிக்கையாளர்கள் ருசியான மாம்பழங்கள் கேட்டு கடைகளுக்கு வருகின்றனர். ஆனால் அவர்களின் விருப்பத்திற்கு ஏற்ப பழங்கள் வழங்க

முடியவில்லை. இதனால் வாடிக்கையாளர்கள் ஏமாற்றத்துடன் கடையில் இருந்து செல்கின்றனர் என்றனர்.

## உரச்செலவை குறைக்க விவசாயிகளுக்கு யோசனை

பதிவு செய்த நேரம்:2012-07-07 12:04:59

சிவகங்கை, : உரச்செலவை குறைக்க மண் பரிசோதனை சிபாரிசுபடி உரமிட வேண்டுமென விவசாயிகளுக்க வேளாண்மைத்துறை யோசனை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து மண் பரிசோதனை நிலைய வேளாண்மை உதவி இயக்குநர் தனபால் கூறியதாவது: வயலில் பயிரில்லாத சமயங்களில் மண் மாதிரி எடுக்கப்பட வேண்டும். வயலில் நிழல் பகுதி, குப்பை கொட்டிய பகுதி, வாய்க்கால், பள்ளமான பகுதி ஆகிய இடங்களை தவிர்த்து மற்ற பகுதிகளில் மண் மாதிரியை எடுக்க வேண்டும். மண் மாதிரியை 4 அல்லது 5 இடங்களுக்கு மேல் எடுக்க வேண்டும். மண் மாதிரி எடுக்கும்போது ஆங்கில எழுத்து ஸ் வடிவத்தில் வெட்டி மண்ணை வெளியில் எடுத்து போட வேண்டும். இரு பக்கங்களிலும் பக்கவாட்டில் மண்ணை குச்சியால் சுரண்டி எடுத்து, மொத்தம் தோண்டப்பட்ட குழி களிலிருந்து அரை கிலோ அளவு மண்ணை சுத்தமான பாலித்தீன் அல்லது துணிப்பையில் எடுக்க வேண்டும்.

நெல், கரும்பு, கடலை, உளுந்து ஆகிய பயிர்களுக்கு முக்கால் அடியும், தோட்டக்கலை பயிர்களுக்கு 3 அடிக் குழி தோண்டி ஒவ்வொரு அடிக்கும் தனித்தனியே மண் மாதிரிகள் எடுக்க வேண்டும். பின்னர் அந்த மண் மாதிரியை சிவகங்கை மண் பரிசோதனை நிலையம் அல்லது அந்தந்த வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் கொடுக்க வேண்டும். தற் போது பருவமழை ஆரம்பிக்க உள்ளதால், உடனடியாக மண் மாதிரியை எடுக்க விவசாயிகள் முன்வர வேண்டும். நுண்ணூட்டச் சத்து ஆய்வுக்கு ரூ.10ம், பேரூட்டச்சத்து ஆய்வுக்கு ரூ.10ம் மொத்தம் ரூ.20 மண் மாதிரி ஆய்வு கட்டணமாக செலுத்த வேண்டும். மண் பரிசோதனை சிபாரிசுபடி உரமிட்டால் உரச்செலவு குறையும். மேலும் மண் வளமும் பாதுகாக்கப்படும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்

## 2வது சீசனுக்கு ஏற்பாடு தீவிரம் சிம்ஸ் பூங்காவில் லட்சம் மலர் செடிகள் நடவு பணி துவங்கியது

பதிவு செய்த நேரம்:2012-07-07 10:43:18

குன்னூர்,: குன் னூர் சிம்ஸ் பூங்காவில் 2வது சீசனுக்கு ஒரு லட்சம் மலர் செடிகள் நடவு செய்யும் பணி துவங்கியது. முன்னேற்பாடுகள் தீவிரமாக நடக்கின்றன.

நீலகிரியில் ஆண்டுதோறும் ஏப்ரல் மாதம் முதல் மே மாதம் முடிய சீசன் காலமாகும். அப்போது நாடு முழுவதில் இருந்தும் ஏராளமான சுற்றுலா பயணிகள் நீலகிரி வருகின்றனர். அவர்களை

மகிழ்விக்க ஒருமாதம் கோடைவிழா நடத்தப்படுகிறது. குன்னூர் சிம்ஸ் பூங்காவில் பழக்கண்காட்சியும் அதில் அடக்கம். பழக்கண்காட்சியை பார்க்க வரும் சுற்றுலா பயணிகளை கவர பூங்கா முழுவதும் மலர் செடிகளும் நடப்படுகின்றன. கடந்த சீசனுக்காக பிப்ரவரி மாதம் 2 லட்சம் மலர் செடிகள் நடவு செய்யப்பட்டன. ஆண்டு முழுவதும் பூக்கும் செடிகள், சீசனுக்கு மட்டும் மலரும் செடிகள் என வகை,வகையான செடிகள் நடவு செய்யப்பட்டன. முதல் சீசனில் 80 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சுற்றுலா பயணிகள் பார்த்து ரசித்தனர்.

இந்நிலையில், செப்டம்பர் மாதம் 2வது சீசன் துவங்குகிறது. அக்டோபர் மாதம் வரை நடக்கும் சீசனை அனுபவிக்கவும் ஏராளமான சுற்றுலா பயணிகள் வர உள்ளனர். அவர்களை கவர பூங்காவை அழகுப்படுத்தும் பணி துவங்கி உள்ளது. முதற்கட்டமாக புதிய மலர் செடிகளை நடவு செய்யும் பணி நேற்று துவங்கியது. மேரிகோல்டு, சால்வியா, சாமந்தி, பேன்சி உள்ளிட்ட 30க்கும் மேற்பட்ட வகையிலான ஒரு லட்சம் மலர்செடிகள் நடவு செய்யப்படுகின்றன. இப்பணிகள் அனைத்தும் இம்மாத இறுதிக்குள் நிறைவு பெற்று விடும். செடிகளை முறையாக பராமரிப்பதன் மூலம் அனைத்தும் பூத்து செப்டம்பர் மாதம் நடக்க உள்ள 2வது சீசனுக்கு வரும் சுற்றுலா பயணிகள் கண்களுக்கு விருந்தாக அமையும். பூங்காவை முழுமையாக பராமரிப்பதுடன் அலங்கார வளைவுகள், நடைபாதைகள் போன்றவற்றையும் புனரமைத்து பொலிவு படுத்தவும் பூங்கா நிர்வாகம் முடிவு செய்துள்ளது.

இத்தகவலை குன்னூர் தோட்டக்கலை துறை உதவி இயக்குனர் சிபிலா மேரி தெரிவித்துள்ளார்.

## பருவமழை பொய்த்ததால் தேயிலை,காய்கறி விவசாயம் பாதிப்பு

பதிவு செய்த நேரம்:2012-07-07 10:43:07

குன்னூர்,: நீலகிரியில் இந்த ஆண்டு மழை பொய்த்து போனது. ஆண்டு தோறும் ஜூன் மாதத்தில் துவங்கும் தென்மேற்கு பருவமழை அக்டோபர், நவம்பர் மாதம் வரை பெய்யும். இந்த ஆண்டு பருவமழை துவங்கினாலும் தீவிரம் அடைய வில்லை. மாவட்டத்தில் கூடலூ ர் ,பந்தலூ ர் ,ஊட்டி உள்ளிட்ட பகுதிகளில் பரவலாக மலை பெய்து வருகிறது.

குன்னூர் ,கோத்தகிரி ,குந்தா, உள்ளிட்ட பகுதிகளில் மழை குறைவாக பெய்வதால் மழை தோட்ட காய்கறி, தேயிலை விவசாயம் வெகுவாக பாதித் துள்ளது. இதனால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். இது குறித்து குன்னூர் உபாசி ஆராய்ச்சி மைய உதவி இயக்குனர் உதயபானு கூறுகையில், குன்னூர் பகுதியில் கடந்த (2011)ஆண்டு ஜனவரி முதல் ஜூன் மாதம் வரை 60 சென்டி மீட்டர் மழை பதிவானது.

இந்த ஆண்டு இதே கால கட்டத்தில் 30 சென்டி மீட்டர் மழை மட்டுமே பதிவாகியுள்ளது .கடந்தாண்டை காட்டிலும் மழை 50 சதவீதம் குறைந்துள்ளது. மேலும் கடந்த சில நாட்களாக வெயிலின் தாக்கம் அதிகரித்து வருகிறது. இந்தாண்டு ஜனவரி முதல் ஜூன் மாதம் வரை

மழையளவு 10சதவீதம் குறைந்துள்ளது. அதனால் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர் என்றார்.

## கோத்தகிரி விவசாயிகளுக்கு மானியத்தில் நீர்பாசனகருவி

பதிவு செய்த நேரம்:2012-07-07 10:42:13

கோத்தகிரி,: விவசாயிகளுக்கு மானியத்தில் நீர்பாசனக் கருவிகள் வழங்கப்பட்டது.

தேசிய தோட்டக் கலை இயக்க திட்டத்தின் மூலம் நுண் நீர் பாசன திட்டத்தின் கீழ் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியத்தில் தெளிப்பு நீர் பாசன கருவிகள் வழங்கும் நிகழ்ச்சி கோத்தகிரி தோட்டக் கலைத்துறை அலுவலத்தில் நீலகிரி மாவட்ட தோட்டக்கலை துறை சார்பில் நடந்தது.

இத்திட்டத்தின் கீழ் கோத்தகிரி மற்றும் கீழ் கோத்தகிரி பகுதிகளில் உள்ள சுமார் 100 ஏக்கர் பரப்பளவிற்கு பாசனக் கருவி வழங்கப்பட்டு வருகிறது. முதல் கட்டமாக விவசாயிகளுக்கு தெளிப்பு நீர் பாசனக் கருவிகள் வழங்கப்பட்டது. கோத்தகிரி ஊராட்சி ஒன்றிய தலைவர் மனோகரன், தோட்டக் கலை துறை இணை இயக்குனர் மோகன், துணை இயக்குனர் மணி, உதவி இயக்குனர் ராஜேந்திரன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

டீநட்டி, சேலக்கொரை, கேர்கம்பை, உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலிருந்து விவசாயிகள் ரங்கசாமி, ராஜன், சண்முகம், ஆலம்மாள் உள்ளிட்ட 11 விவசாயிகளுக்கு தலா ரூ.30 ஆயிரம் மதிப்புள்ள பாசனக் கருவிகள் இலவசமாக வழங்கப்பட்டது. நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கோத்தகிரி தோட்டக்கலைத்துறை அலுவலர்கள் சந்திரன், ராமன் ஆகியோர் செய்திருந்தனர். முடிவில் கோத்தகிரி ஊராட்சி ஒன்றிய கவுன்சிலர் பத்மாபன் நன்றி கூறினார்.